**Principal District Munsif Court, Sankarankovil.**

தேதி : 15.06.2022
அ.வ.எண். 221/2016

வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் 1 முதல் 3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–

இந்த வழக்கில் நான் 3 ம் வாதி. 1,2 வாதிகள் எனது உடன் பிறந்தவர்கள் அவர்களுக்கும் சேர்த்துதான் நான் சாட்சி சொல்கிறேன். 1 ம் பிரதிவாதி குருசாமி கோனார் எனது பெரியப்பா. 2,3 ம் பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதியின் மகள்கள். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பாவின் சொத்து எங்களுக்கு வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் எத்தனை அயிட்ம் சொத்து இருக்கிறது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சொத்தின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. எனது தாத்தாவின் பெயர் குருசாமி கோனார். எனது பாட்டி பெயர் ராமாத்தாள். எனது தாத்தா பாட்டிக்கு குருசாமி கோனார், காளிமுத்து, சுந்தரம்மாள், முத்துசெல்வம் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவர். 1 ம் பிரதிவாதி குருசாமி கோனார் மனைவி பெயர் பேச்சியம்மாள். அவர்களின் குழந்தைகள் தான் 2,3 பிரதிவாதிகள். எனது அப்பாவின் பெயர் காளிமுத்து. அவர்களின் வாரிசுகள் தான் இந்த 1 முதல் 3 வாதிகள்.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**